6. அரசினர் தனித் தீர்மானம்.

மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ் நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப் பட வேண்டும் என்பது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு,

பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல் படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று—மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது." என்ற தீர்மானத்தை @ முன்மொழிகிறேன்.

@ 117-125-ம் பக்கங்களில் இத்தீர்மானத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைப்பு I and I அ ஆக அச்சிடப் பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தங்கள் கொடுப்பவர்கள் இன்றைக்குள் கொடுத்துவிடுங்கள். இன்றைக்குள் கொடுத்து விட்டால் அந்தத் திருத்தங்களை பின்பு முன்மொழிந்து கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை இப்பொழுது முன்மொழிந்திருக்கிறார்கள்.

He has now moved the Resolution. Before he is allowed to speak on it, certain amendments which have been given notice of may be moved. Then, both the Resolution and the amendments will be before the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் திருத்தங்கள் என் கைக்கு வரவில்லை. அந்தத் திருத்தங்களைப் பார்த்துவிட்டு அனுமதி தந்த பிறகுதான் சர்குலேட் செய்ய வேண்டும். கொடுப்பவர்கள் இன்றைக்குக் கொடுத்துவிட்டால் நாளைக்கு முன்மொழிந்து கொள்ளலாம். பேசுவதை வேண்டாமென்று சொல்லவில்லை.

7. நடைமுறைக் கேள்விகள்.

(அ) முதலமைச்சர் முன்மொழிந்துள்ள தனித்தீர்மானத்திற்கு உறுப்பினர்கள் உடனடியாகத் திருத்தங்கள் முன்மொழிவது குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நம்முடைய சட்டமன்ற மரபுகூட, மானியக் கோரிக்கைகள் வரும்போது கூட அமைச்சர்கள் மானியக் கோரிக்கைகளை அவை முன் வைத்தவுடன் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் அவற்றை முன்மொழிகிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் வேறு. ஆளுநர் அவர்கள் உரைக்கு மறுநாள் திருத்தங்கள் கொடுக்கிறோம். அதே போன்று இதற்கும் திருத்தங்களை நாளைக்கு முன்மொழியலாம்.